Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Yanaigal - Naaraai Naaraai - A Study on the Short Story Collection

**Dr. D. R. Ramalakshmi,** Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9451-849X**
**DOI: 10.5281/zenodo.7549907**

## Abstract

*The habitats of the herds of elephants that roam freely in the forests are suffering due to human encroachment and other activities. The purpose of this article is to explore that one-third of the suffering caused to elephants is caused by humans. Elephants are dark black colored and large animals in the world. Among the various animals that live in forests, the elephant is the one that has been domesticated the most by humans. Elephants are the largest land mammals. They have high memory and low vision; having a gregarious habit; can live up to 60 to 70 years. The forest department provides protection, medicine and food to wild elephants and maintenance of elephants in various ways. Domesticated Kumki elephants are also known to be good companions and good workers for the forest department.*

**Keywords:** Yaanai, Kumki, Kethan, Maavuthan.

## References

[1] Aattanathi. *Naaraai Naaraai*. New Century Book House Private Limited, Chennai, First Edition, 2015.
[2] Ganesayyar. *Tholkappiyam-Nchinarkkiniyar Urai*. Ulagath Thamizharaichi Niruvanam, Chennai, 2007.
[3] Saami, P. L. *Sanga Ilakkiyathil Vilangina Vilakkam.* Thirunelveli Saiva Siddhantha Noorpathippu Kazhagam, First Edition, 1970.
[4] Puliyur Kesigan. *Puanaaru Moolamum Urayum.* Saratha Pathippagam, First Edition, Chennai, 2010.
[5] Ramalingam, M. *Puthiya Urainadai Panbum Payanum*. Meenakshi Puthaga Nilayam, Madurai, First Edition, 1981.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# யானைகள் - நாராய் நாராய் சிறுகதைத் தொகுப்பை முன்வைத்து

**முனைவர் தா. ரா. ராமலட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0001-9451-849X**
**DOI: 10.5281/zenodo.7549907**

**ஆய்வுச்சுருக்கம்**

*காடுகளில் சுதந்திரமாகத் திரியும் யானைக் கூட்டங்களின் வாழிடங்கள் மனிதர்களின் ஆக்கிரமிப்பினாலும் இன்னபிற செயல்களினாலும் துன்பத்துக்கு உள்ளாகின்றன. யானைகளுக்கு ஏற்படும் இன்னல்களில் மூன்றில் ஒரு பங்கு மனிதர்களாலேயே ஏற்படுகிறது என்பதை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். காட்டு யானைகளுக்கும் பராமரிப்பு யானைகளுக்கும் வனத்துறை பல்வேறு வகையிலும் பாதுகாப்பு, மருத்துவம், உணவு என வழங்கி பராமரிக்கும் சூழலும் ஏற்படுகிறது. பழக்கப்படுத்தப்பட்ட கும்கி யானைகள் வனத்துறைக்கு உற்ற தோழனாய் நல்ல பணிபுரியும் பணியாளர்களாய் விளங்குவதும் இயம்பப்பட்டுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** யானை, கும்கி, கேத்தன், மாவுத்தன்

**முன்னுரை**

யானைகள் கரிய நிறமும் பெரிய உருவமும் கொண்ட விலங்கினங்கள் ஆகும். காடுகளில் வாழும் பல்வேறு விலங்கினங்களில் அதிகமாக மனிதனால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கினம் யானை ஆகும். நிலப்பரப்பில் வாழும் மிகப்பெரிய பாலூட்டி வகை யானைகளே. இவை அதிக ஞாபக சக்தியும் குறைந்த பார்வைத் திறனையும் உடையவை; கூட்டம் கூட்டமாக வாழும் பழக்கத்தைக் கொண்டவை; 60 முதல் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழக் கூடியவை. வன விலங்குகளில் யானைகளே மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதும் தன்னையறியும் ஆற்றல் கொண்டவையுமாகும். இதனால்தான் சங்ககால இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை யானைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

**யானைகளின் வேறு பெயர்கள்**

யானையைக் குறிப்பதற்கு இலக்கியங்களில் பல்வேறு பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பொதுவாக ஆண் யானையை, ‘களிறு’ என்றும் பெண் யானையை, ‘பிடி’ என்றும் அழைப்பர். ‘தும்பி, மாதங்கம், தோல், கறையடி, எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம், உவா, கரி, கயம், களிறு, கைம்மா, சிந்துரம், வயமா, புகர்முகம், தந்தி, மதாவளம், தந்தாவளம், வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா, மதகயம்,போதகம்’ (சூடாமணி நிகண்டு

விலங்கின் பெயர்த் தொகுதி என்பனவாக யானைகளின் தோற்றம், பயன் எனும் அடிப்படையில் 60க்கும் மேற்பட்ட பெயர்கள் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன. பெரும்பாலும் அவை காரணப் பெயர்களாக அமைந்துள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த யானைகளின் இயல்புகளை ஆட்டனத்தியின் நாராய்… நாராய்… சிறுகதைத் தொகுப்பின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங்கு அமையும் (தொல்.செய்யுளியல். 192)**

எனும் தொல்காப்பிய நூற்பாவின் படி இக்கதையில் வரும் யானைகள் பேசுவது போலவும் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவது போலவும் இச்சிறுகதைத் தொகுப்பின் கதைகள் அமைந்துள்ளன.

> **உயிர் இல்லாத பொருளை உயிருள்ளன போலவும் உணர்வு இல்லாத பொருட்களை உயிருள்ளவை போலவும் கற்பனை செய்வது உண்டு. இவ்வாறு உருவகம் செய்வதை மேலைநாட்டார் personification என்பர். உயர்திணையாக உருவகித்து அவற்றுடன் பேசுவதை Apostrophe என்பர். நாம் இரண்டையுமே இலக்கணை என்று பொதுப்படையாகப் பேசுகிறோம் (மா.ராமலிங்கம், 1981: 81).**

**யானைகளின் வாழிடம்**

யானைகள் பெரும்பாலும் அடர்ந்த காடுகளிலும் மலைகளிலும் வாழ்கின்றன.

> **காடுகள் நிறைந்த குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஆறுகள் நிறைந்த மலை நாட்டிலும் மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளிலும் தமிழ்நாட்டில் யானைகள் நிறைய காணப்படுகின்றன முக்கியமாக மூங்கில் காடுகள் நிறைந்த குன்றுகளும் மலைகளும் யானைகள் விரும்பி வாழும். (சாமி பி.எல்., 1978; 277-278).**

**யானைகளின் உணவு**

யானைகள் இலைதழைகளை உண்ணக்கூடிய மிகப்பெரிய தாவர உண்ணிகள் ஆகும். இயற்கையாகக் காடுகளில் கிடைக்கக்கூடிய இலை தழைகள், உணவு தானியங்கள் ஆகியவற்றை உண்ணும் பழக்கம் உடையவை. யானைகளின் முக்கிய உணவு மூங்கில் ஆகும். மரம், செடி, கொடிகளின் இலைகள், கொழுந்துகள், சில மரங்களின் மென்மையான பசிய பட்டைகளையும் நெல்லிக்காய், கடுக்காய் ஆகியவற்றையும் உணவாகக் கொள்கின்றன. விளைநிலங்களில் பயிரிட்டுள்ள மா, பலா, கரும்பு, வாழை, சோளம் யானைகள் விரும்பி உண்ணும் வகைகளாகும்.

> **வந்த இடத்தில் இனிப்பும் நீரும் கலந்த தர்பூசணியும் வாழையும் தென்னையும் கிடைத்தது. பூசணிக்காயும் கொள்ளும் கிடைத்தன. என் பசியைப் போக்கத்தானே விதவிதமாய்த் தின்றேன் (ஆட்டனத்தி, 2015; 108)**

என்று யானை குறிப்பிடுவதிலிருந்து யானையின் உணவுப் பழக்கத்தைத் தெரிந்துகொள்ள முடிகிறது. காடுகளில் பராமரித்து வரும் யானைகளுக்கென்று அரசு சிறப்பு உணவாகப்

பல்வேறு உணவுகளைத் தயாரித்து வழங்குகின்றது என்பதை 'என் முன்னால் இலை, தழை, மூங்கில், பசுந்தீவனம், தேங்காய், அரிசி மற்றும் ராகி கேக் என்று பல தினுசாய்க் கிடக்கிறது' என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது (மேலது,105). மேலும், கருவுற்ற யானைகளுக்கு என்று சரிவிகித உணவும் வழங்கப்படுகிறது. அவ்வாறு உண்டால் தான் யானையின் கன்றுகள் நலமுடன் பிறக்கும் என்பதற்காகச் சத்து மாத்திரைகள் அளிக்கப்படுகிறது என்பதை,

> **இப்போதெல்லாம் காயத்ரிக்கு சரிவிகித உணவுதான், இலைகள், மூங்கில் பசுந்தீவனம், தேங்காய், அரிசி, கரும்பு என்று சரிவிகிதமாய் சத்து மாத்திரைகள் என்று எல்லாம் கட்டுப்பாட்டுடன் வழங்கிட்ட கேத்தனின் செயல்பாடு (ஆட்டனத்தி, 2015; 65)**

என்று கருவுற்ற யானைகளுக்கு வழங்கப்படும் சத்தான உணவு முறை பற்றியும் சுட்டப்படுகிறது.

**கும்கி யானைகள்**

'கும்கி யானைகள்' என்பது ஊருக்குள் புகும் அல்லது காட்டுக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் காட்டு யானைகளை அடக்குவதற்காகப் போதிய பயிற்சி அளித்து பழக்கப்படுத்தப்பட்ட யானை என்பது பொருளாகும். இவ்வாறு பழக்கப்பட்ட யானைகள் வனப்பகுதியில் ரோந்து சென்று பாதுகாப்பைப் பலப்படுத்துவது, ஊருக்குள் புகும் காட்டு யானைகளை மீண்டும் காட்டுக்குள் விரட்டி அடிப்பது, மதம் பிடித்த யானையை பழக்கி வழிக்குக் கொண்டுவருவது, வாகனங்கள் போக முடியாத இடத்தில் வெட்டப்படும் மரங்களை உரிய இடத்தில் கொண்டு சேர்ப்பது போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன.

காடுகளில் வாழும் யானைகளைப் பழக்கி, தங்கள் தேவைக்குப் பயன்படுத்தும் பழக்கம் உண்டு. இவற்றைப் பராமரிப்பு யானைகள் என்று அழைப்பதும் உண்டு. இவற்றைப் பராமரித்து வருபவர்களை 'மாவுத்தன்' என்பர். யானைகளைப் பழக்கும்போது சில வார்த்தைகளின் மூலம் யானைகளுக்குக் கட்டளையிடுவர்; சைகைகள் சொல்லித்தருவர். இதனை,

> **காலை நீட்டுவதற்காக நீட் என்கிறீர்கள்… இங்கே வா என்று அழைக்க பட்தா என்கிறீர்கள் முன்னே வந்து பின்னே போக… படி பித்தர் என்று சொல்கிறீர்கள். நான் முன்னாடி போக வேண்டுமென்றால் நீங்கள் ஹர்ட் என்று சொன்னால் செய்ய வேண்டும். நீங்கள் என்று ப்பரை சொல்லும் பட்சத்தில் நான் புரிந்து கொண்டு வாயைத்திறக்க வேண்டும். பரியா என்று சொன்னால் எடுக்கக்கூடாது என்று புரிந்து கொள்கிறேன். யுக் என்றால் கீழே குனிந்து பொருளை எடு எனப் புரிந்து கொள்வேன். தலை தலை என்று நீங்கள் சொன்னால் தண்ணீரை எடுத்துக் குடிக்கச் சொல்கிறீர்கள் என்று புரிந்து கொள்கிறேன் (மேலது, 106)**

என்று அன்பின் வழியது சிறுகதையில் யானை குறிப்பிடுவதிலிருந்து யானைகளை அதன் பராமரிப்பாளன் சமிக்கைகள் மூலமாகவும் ஒலிகள் மூலமாகவும் கட்டளைகளைப்

பிறப்பிப்பான் என்பது சுட்டப்படுகிறது. இவ்வாறு யானைகளை கும்கி யானைகள் ஆக மாற்றுவதற்கு வனத் துறைப் பணியாளர்கள் கடுமையாக உழைக்கின்றனர் என்பதை,

**நோய்வாய்ப்பட்டிருந்த சுயம்புவை குணப்படுத்தி கும்கியாக மாற்ற வரகளியாறு யானை முகாமிற்கு அனுப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகளில் ஏற்பட்ட வேலைப்பளு... அப்போது சுயம்பு கொடுக்கும் அன்பு தொல்லை, அலைச்சல், தூக்கமின்மை, உடல் முழுக்க அசதி வியாபித்திருந்தது... (மேலது, 30)**

என்பதிலிருந்து காட்டு யானையை கும்கி யானைகள் ஆக மாற்றுவதற்கு அதன் பணியாளர்கள் ஆற்றும் கடும் பணி சுட்டப்படுகிறது.

**ஏழு வருடங்களுக்கு முன் இந்த முகாமிற்கு கொண்டு வந்தபோது முரண்டு பிடித்து... மிரட்டி... பிளிறி... அடேயப்பா மாரன், மான்பன், காளன், சோமன், பொம்மன் கேத்தன் என்று அத்தனை பேரும் இராப்பகல் கிராலில் அடைக்கப்பட்டிருந்த காட்டு யானைக்குக் காயத்ரி என்று பெயரிட்டு மற்ற யானைகளோடு யானையாய் கும்கி என மாற்றுவதற்கும் மாறுவதற்கும் ஆற்றிய உழைப்பு... (மேலது, 62)**

எனக் குறிப்பிடுவதிலிருந்து காட்டு யானையை கும்கி ஆக மாற்றும் பணியாளர்கள் மன உணர்வு வெளிப்படுகிறது. இவ்வாறு பழக்கப்படும் காட்டு யானைகளின் உதவியால்தான் காடுகளில் தடம் மாறி வரும் யானைக் கூட்டங்களை மீண்டும் காட்டுக்குள் அனுப்பப்படுகிறது. இதனை, "யானைகளைத் திரும்ப காப்பு காட்டுக்குள் விரட்டிக் கொண்டு வருவதற்குள் அதுவும் நான்கு கும்கி யானைகளின் உதவியால்தான் முடிந்தது" என்பதிலிருந்து கும்கி யானைகளின் பயன்பாடு பயன்பாடு புலனாகிறது.

**காட்டு யானைகள் ஊருக்குள் புகுதல்**

காடுகளில் போதிய உணவும் நீரும் பற்றாக்குறை ஏற்படும் வறண்ட காலங்களில் உணவுத் தேவையின் பொருட்டு அல்லது திடீரென ஏற்படும் காட்டுத்தீயினால் அதற்கு அஞ்சி யானைகள் வனத்திலிருந்து ஊருக்குள் புகுகின்றன. இதனை,

**என் வனதிற்குள்ளேயே நிரந்தரமாய் இருக்கலாம் என்றுதான் நினைக்கிறேன் முடியவில்லையே பசி ருசி அறியாது என்பதுபோல இங்கு கிடைக்கும் இலை தழைகளை சாப்பிட்டு காலத்தை கடத்திக் கொண்டு இருக்கிறேன். மறுபடியும் வறட்சி... மழை மறுத்த நாட்கள் வாட்டி எடுக்கும் வெயில்... ஓடைகளில் தண்ணீர் போதிய வரத்து இல்லாமல் தாகத்தைத் தணிக்கக் கூட முடியாமல் தவிக்கிறேன்.. ஒரு நாள் வெளியே செல்ல வேண்டும் என முடிவெடுக்கிறேன். (மேலது, 62)**

என்று யானைகள் காடுகளை விட்டு ஊருக்குள் வருவதற்கான காரணங்கள் சொல்லப்படுகின்றன.

**யானையை விரட்டுதல்**

காடுகளில் வாழும் யானைகளுக்குத் தேவையான உணவு கிடைக்காத பொழுது யானைக் கூட்டங்கள் விளை நிலங்களில் புகுந்து அழிப்பதும் உண்டு. **யானை புக்க நிலம்**

**போல (புறம்.184; 10)** என்ற சங்கப் பாடலும் யானைகள் விளைநிலங்களில் புகுந்து பயிர்களை அழித்தமையைக் குறிப்பிடுகிறது. பெருகிவரும் மக்கள் தொகை காரணமாக காடுகள் அழிக்கப்பட்டு விளை நிலங்களாகவும் மக்கள் குடியிருப்பு பகுதிகளாக மாற்றப்படுவதால் யானைகளின் வாழ்விடப் பரப்பு குறைகிறது இதனால் யானையின் வழித்தடங்களும் பாதிக்கப்படுகின்றன. எனவே அவை உணவு தேடியும் பாதை மாறியும் மக்கள் வாழும் ஊருக்குள் வந்து விடுவதுண்டு. இவ்வாறு ஊருக்குள் நுழையும் யானைக் கூட்டத்தினால் மனிதனின் வாழ்வாதாரமான விவசாய விளைபொருட்கள் வீணாகின்றன. எனவே பயிர்களைக் காக்கும் பொருட்டு அவற்றின் உரிமையாளர்கள் யானைகளை விரட்டப் பல்வேறு உத்திகளைக் கையாள்கிறார்கள். தீப்பந்தங்கள் கொண்டு தாக்குதல், துப்பாக்கியிலிருந்து வெடிச்சத்தம் ஏற்படுத்தி அச்சுறுத்தல், துப்பாக்கியால் சுடுதல், வேட்டைக் கருவிகள் கொண்டு தாக்குதல் ஏற்படுத்தி மின்வேலி, முள்வேலி ஏற்படுத்தி யானைகளை விரட்டுதல் போன்ற செயல்களைச் செய்வர். இதனை,

> **இந்த மனிதர்கள் என்னைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தெடுத்தார்கள். தீப்பந்தங்களை வீசி எறிந்தார்கள். டமாரமடித்தும் பட்டாசு வெடித்தும் என்னைப் பயமுறுத்தினார்கள் கம்பியைத் தொட்டாலே ஷாக்கடிக்கட்டும் ஷாக்கடிக்கப்பட்டு பயந்து சாகட்டும் என்றல்லவா சோலார் மின் வேலி அமைத்தார்கள் (ஆட்டனத்தி 2015; 65)**

என்று குறிப்பிடுவதிலிருந்து மனிதர்கள் தற்காலத்திலும் இதே உத்தியைப் பயன் படுத்துவதை அறியமுடிகிறது .

**உயிர் கொல்லும் யானைகள்**

யானைகள் காடுகளில் இருந்து வெளியே வரும்போது மக்களுக்குப் பலவித இன்னல்களை இழைக்கின்றன. பல நேரங்களில் பொதுமக்களை தாக்கிக் கொல்வதும் உண்டு. சில யானைகளளை அரசே சுட்டுக் கொள்ளும்படியும் உத்தரவிட்டிருக்கிறது.

> **எத்தனை உயிர்களை பலி வாங்கியிருக்குது எத்தனை விவசாய நிலங்களில் புகுந்து பழங்கள் காய்கறிகளை சேதப்படுத்தி இருக்கு, அதிகாரிங்க கண்டதும் சுடச் சொல்லி உத்தரவு போட்டு இருக்காங்க (ஆட்டனத்தி, 2015; 102)**

என்று மக்களைத் தொல்லை கொடுக்கும் யானைகளை சுட்டுக்கொள்ள அரசே உத்தரவிட்டதைக் குறிப்பிடுகிறது

கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டு வயநாடு, நிலம்பன் பகுதிகளில் சுற்றி வந்த ஒரு மக்னா யானை 1998ஆம் ஆண்டு வரை மிக மூர்க்கமாக நடந்து கொண்டது. அப்போது 12க்கும் மேற்பட்ட மனித உயிர்களைப் பலி வாங்கியது. இது அபாயகரமான யானையாக அறிவிக்கப்பட்டு அதனைக் கண்டதும் சுட கேரள அரசு உத்தரவு வெளியிட்டது. ஆனால் யானை டாக்டர் கிருஷ்ணமூர்த்தியின் உதவியால் அதன் உடலில் பாய்ந்த 22 குண்டுகளையும் வெளியே எடுத்து பராமரிக்கப்பட்டு கும்கியாக மாற்றப்பட்டது. பின்னர் இந்த யானை

வனத்துறைக்கு பெரிய உதவியாக இருந்தது. மேலும், மூர்த்தி, சின்னத்தம்பி, ரிவால்டோ போன்ற பல்வேறு யானைகள் மக்களுக்கு பல்வேறு விதமாக இன்னல்கள் கொடுத்தாலும் அவற்றை முறையாகப் பராமரித்து கும்கியாக மாற்றி மக்களுக்கு சேவை செய்யுமாறு மாற்றப்பட்டுள்ளது.

**முடிவுரை**

யானைகள் காடுகளில் இருந்து வெளியே வரும்போது மக்களுக்குப் பலவித இன்னல்களை இழைக்கின்றன. இதனால் மனிதன் மனிதன் யானை மோதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன; அதிகமாக நிகழ்கின்றன. இதனால் யானைகளுக்குப் பல்வேறு விதமான பாதிப்புகளும் ஏற்படுகின்றன. பல்வேறு பலன்களை பெற்றுக் கொண்டாலும் மனிதனுக்கு யானைகளுக்கு பல்வேறு விதமான துன்பங்களை கொடுக்கிறான். யானைகளுக்கு ஏற்படும் இடையூறுகள் ஏற் படும் துன்பங்களில் மூன்றில் ஒரு பங்கு மனிதனாலேயே ஏற்படுகிறது.

**குறிப்புகள்**

[1] *ஆட்டனத்தி. நாராய் நாராய்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு - 2015.

[2] கணேசய்யர். *தொல்காப்பியம் - நச்சினார்க்கினியர் உரை.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.

[3] சாமி, பி. எல். *சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., சென்னை, முதல் பதிப்பு, 1970.

[4] புலியூர்க் கேசிகன். *புறநானூறு மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

[5] ராமலிங்கம், மா. *புதிய உரைநடை பண்பும் பயனும்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதல் பதிப்பு - 1981.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.